Singapore Examinations and Assessment Board

Singapore–Cambridge General Certificate of Education
Advanced Level (2022)

# Higher 2
# Tamil Language and Literature
# உயர்தரம் 2
# தமிழ்மொழி, இலக்கியம்
# (Syllabus 9574)

© MOE 2022

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| மதிப்பீட்டு நோக்கங்கள் | **3** |
| தேர்வு அமைப்புமுறை | **4** |
| தேர்வு விவர அட்டவணை | **6** |
| கட்டுரை மதிப்பீட்டுத் திட்டம் | **7** |
| கருத்துரை எழுதுதல் மதிப்பீட்டுத் திட்டம் | **9** |
| இலக்கியத்திற்குரிய மதிப்பீட்டுத் திட்டம் | **10** |

## மதிப்பீட்டு நோக்கங்கள்

2014-ஆம் ஆண்டு கல்வி அமைச்சின் கல்வி அமைச்சின் பாடக்கலைத்திட்ட வரைவு, மேம்பாட்டுப் பிரிவினால் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகப் புகுமுகநிலைக்கான பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கம் மாணவர் அடைந்துள்ள அடிப்படை மொழித் திறன்களாகிய கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றோடு பேச்சுவழியாகவும் எழுத்துவழியாகவும் அமைந்த இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களை வளர்த்தல் ஆகும்.

இப்பாடம் மொழியையும் இலக்கியத்தையும் உள்ளடக்கியிருக்கிறது. மாணவர்களின் மொழித் திறன் வளர்ச்சிக்கும் தமிழ் இலக்கியம் பற்றி அறிந்துகொள்வதற்கும் இப்பாடம் வழிவகுக்கும். மேலும், கவிதை, நாடகம், நாவல், சிறுகதை ஆகிய இலக்கிய வகைகளைப் படித்து மகிழ்வதற்கும் அவற்றைப்பற்றிக் கலந்துரையாடுவதற்கும் மாணவர்களுக்குத் தேவையான பயிற்சியை இலக்கியம் அளிக்கும். மேற்கண்ட நோக்கங்களை அடைவதற்குத் தேவையான திறன்களை மாணவர்கள் பெற்றிருப்பர். இத்திறன்களைச் சோதிப்பதே மதிப்பீட்டின் நோக்கங்கள் ஆகும். அம்மதிப்பீட்டின் நோக்கங்கள் பின்வருமாறு:

- சம்பவங்களையும் அனுபவங்களையும் சிறந்த அமைப்புமுறையில் விவரித்து எழுதுதல்

- கருத்துகளைப் பொருத்தமான ஆதாரங்களைப் பயன்படுத்தி விளக்கியும் நியாயப்படுத்தியும் விவாதித்தும் எழுதுதல்

- பரந்துபட்ட தலைப்புகளையொட்டிக் கருத்துரை எழுதுதல்

- கருத்துக்களம், வலைப்பூக்கள், மின்னஞ்சல் போன்றவற்றின் வழியாகக் கருத்துப் பரிமாற்றம் நிகழ்த்துதல்

- பலதரப்பட்ட பனுவல்களைப் படித்து அவற்றின் உட்பொருளைப் புரிந்துகொள்வதோடு அவற்றை மதிப்பீடு செய்தல்

- பழங்கால, தற்கால கவிதைகள், நாடகம், நாவல், சிறுகதை ஆகிய இலக்கிய வகைகளைப் படித்து மகிழ்வதோடு அவற்றிற்குத் திறனாய்வு நோக்கில் கருத்துகள் எழுதுதல்

## தேர்வு அமைப்புமுறை

இத்தேர்வு மொத்தம் மூன்று வினாத்தாள்களைக் கொண்டது.

**வினாத்தாள் 1:**
இத்தாள் **பகுதி 1**, **பகுதி 2** ஆகிய இரு பிரிவுகளை உள்ளடக்கியது.

**பகுதி 1: கட்டுரை**
**(1 மணி 15 நிமிடங்கள், 35 மதிப்பெண்கள்)**

இப்பகுதியில் கொடுக்கப்படும் நான்கு தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றினைப் பற்றி 350 சொற்களுக்குக் குறையாமல் விடை எழுதுதல் வேண்டும். கட்டுரைத் தலைப்புகளும் கருத்து விளக்கப்படமும் இப்பகுதியில் இடம்பெறும்.

**பகுதி 2: கருத்தறிதலும் மொழிப் பயன்பாடும்**
**(1 மணி நேரம், 35 மதிப்பெண்கள்)**

இப்பகுதியில் ‘அ’, ‘ஆ’ ஆகிய பிரிவுகள் இருக்கும்.

**‘அ’ பிரிவு (முன்னுணர்வுக் கருத்தறிதல்)**

இப்பிரிவில் கொடுக்கப்படும் ஓர் உரைநடைப் பகுதியில் ஐந்து கோடிட்ட இடங்கள் இடம்பெறும். மாணவர்கள் மிகப் பொருத்தமான சொற்களைக்கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்பவேண்டும்.

**‘ஆ’ பிரிவு (சுயவிடைக் கருத்தறிதல்)**

இப்பிரிவில் ஓர் உரைநடைப் பகுதியையொட்டி ஐந்து சுயவிடை வினாக்கள் கேட்கப்படும். அவற்றுள் ஒரு வினா சொற்பொருளை ஒட்டி அமையும். மாணவர்கள் வினாக்களுக்கு விடைகளைக் கண்டறிந்து சொந்த நடையில் எழுதவேண்டும்.

**வினாத்தாள் 2 (மின்னியல் தேர்வு)**
**(1 மணி நேரம், 30 மதிப்பெண்கள், 15%)**

**சுயவிடைக் கருத்தறிதல்**

இப்பிரிவில் இரண்டு உரைநடைப் பகுதி கொடுக்கப்படும். அவற்றையொட்டி நான்கு சுயவிடை வினாக்கள் கேட்கப்படும். மாணவர்கள் வினாக்களுக்கு விடைகளைக் கண்டறிந்து சொந்த நடையில் தட்டச்சுச் செய்யவேண்டும். அவற்றுள் ஒரு வினா இலக்கணக் கூறுகளையொட்டியும் மற்றொரு வினா கருத்துரை எழுதுதலையொட்டியும் அமையும். கருத்துரை எழுதுதலையொட்டி அமையும் வினாவுக்கு மாணவர்கள் 140 சொற்களில் தங்கள் விடையைத் தட்டச்சு செய்யவேண்டும். கருத்துரை வினாவுக்கு 15 மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**வினாத்தாள் 3**
**(3 மணி நேரம், 100 மதிப்பெண்கள், 50%)**

இவ்வினாத்தாள் இலக்கியப் பாட வினாக்களை உள்ளடக்கியது. இவ்வினாத்தாளில் மொத்தம் நான்கு பிரிவுகள் இருக்கும். அவை நாவல், சிறுகதை, நாடகம், கவிதை ஆகியனவாகும். ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு வினாக்கள் என்ற அடிப்படையில் மொத்தம் எட்டு வினாக்கள் கேட்கப்படும். மாணவர்கள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினாவிற்கு விடையளிக்கவேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் 25 மதிப்பெண்கள் வழங்கப்படும். இவ்வினாத்தாள் திறந்த புத்தக மதிப்பீட்டு முறையில் அமைந்திருக்கும்.

**‘அ’ பிரிவு: நாவல்**

பால்மரக் காட்டினிலே (அகிலன்)

**‘ஆ’ பிரிவு - ‘ஈ’ பிரிவு**

இலக்கியச் சாரல்

1) இது மிஷின் யுகம் (புதுமைப்பித்தன்)
2) ஓர் ஆன்மாவின் திரை அகற்றப்படுகிறது (நா. கோவிந்தசாமி)
3) விடியுமா? (கு.ப.ராஜகோபாலன்)
4) A12662901 (சுஜாதா)
5) இலட்சியங்களின் ஊனங்கள் (மா. இளங்கண்ணன்)
6) ஆயிஷா (இரா நடராசன்)
7) நாடோடிகள் (இராம. கண்ணபிரான்)
8) தமிழுக்கு அமுதென்று பேர் (கனகலதா)

**‘இ’ பிரிவு: நாடகம்**

1. சிங்கப்பூர் மாப்பிள்ளை (சே. வெ. சண்முகம்)
2. காதல் என்ன விலை? (டி. டி. தவமணி)

**‘ஈ’ பிரிவு: கவிதை**

1) யாயும் ஞாயும் யாரா கியரோ (செம்புலப் பெயனீரார்))
2) நிலத்தினும் பெரிதே (தேவகுலத்தார்)
3) ஈன்ற புறந்தருதல் (பொன்முடியார்)
4) யாதும் ஊரே யாவரும் கேளிர் (கணியன் பூங்குன்றனார்)
5) திருக்குறள்: அன்புடைமை, ஆள்வினையுடைமை
6) தமிழ் (பாரதியார்)
7) எந்நாளோ? (பாரதிதாசன்)
8) எறும்பு (ந பழனிவேலு)
9) இயற்கை இன்பம் (சிங்கை முகிலன்)
10) சாந்திதரும் அந்தி (ஆ பழனி)
11) இரவிலும் பகலைப் பார் (அமலதாசன்)
12) கல்லின் காயம் (அப்துல் ரகுமான்)
13) புல் (நா காமராசன்)
14) மரம் (வைரமுத்து)
15) நூல் (க. து. மு. இக்பால்)
16) ரப்பர் மரங்கள் (கோ. புண்ணியவான்)
17) சுயம் (நூர்ஜஹான் சுலைமான்)
18) தாய்மையின் காத்திருப்பு (மலர்விழி இளங்கோவன்)
19) கழிவறைக் குழந்தை (ஷாஹுல் ஹமீது)
20) முகவரிகள் தொலைவதில்லை (மாதங்கி)
21) தூங்காதே தம்பி தூங்காதே! (பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
22) மனிதன் என்பவன் தெய்வமாகலாம் (கண்ணதாசன்)
23) கூண்டுக்கு விடுதலை (நா. முத்துக்குமார்)
24) குருவிக்கூடுகள் & கடவுளைத்தேடி (ஏ. தேவராஜன்)
25) சோம்பல் மாணவன் & எறும்புகள் வரும் நேரம் (ந. பச்சைபாலன்)

## தேர்வு விவர அட்டவணை

# சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் மேனிலை உயர்தரம் 2 தமிழ்மொழி, இலக்கியம் (9574)

| **தாள் (நேரம்)** | **பொருளடக்கம்** | **வினா வகை** | **வினாக்களின் எண்ணிக்கை** | **மதிப்பெண் (மதிப்பளவு)** |
|---|---|---|---|---|
| **1**<br><br>(1 மணி 15 நிமிடங்கள்) | **பகுதி 1: கட்டுரை**<br>(350 சொற்களுக்குக் குறையாமல்)<br><br>வகைகள்: நிகழ்வு, விளக்கம், கருத்துரைப்பு, விவாதம் | கட்டுரை | 4<br>(ஒரு வினாவிற்கு விடையளித்தல்) | **70 (35%)**<br><br>35<br>**(17.5%)** |
| | **பகுதி : கருத்தறிதலும் மொழிப் பயன்பாடும்**<br>**'அ' பிரிவு**<br>முன்னுணர்வுக் கருத்தறிதல்<br><br>**'ஆ' பிரிவு**<br>சுயவிடைக் கருத்தறிதல்<br>(சொற்பொருள் வினா உட்பட) | கோடிட்ட இடங்களை நிறைவு செய்தல்<br><br>சுயவிடை | 5<br><br>5 | 5<br>**(2.5%)**<br><br>30<br>**(15%)** |
| **2**<br>**(மின்னியல் தேர்வு)**<br><br>(1 மணி 45 நிமிடங்கள்) | **கருத்தறிதலும் மொழிப் பயன்பாடும்**<br><br>சுயவிடைக் கருத்தறிதல்<br>(இலக்கண வினாவும் கருத்துரை எழுதுதல் வினாவும் உட்பட) | சுயவிடை | 4 | **30**<br>**(15%)** |
| **3**<br><br>(3 மணி நேரம்)) | **இலக்கியம்**<br>**'அ' பிரிவு**: நாவல்/சிறுகதை<br><br>**'ஆ' பிரிவு**: கவிதை<br><br>**'இ'** பிரிவு: நாடகம்<br><br>**'ஈ'** பிரிவு: இலக்கியத் திறனாய்வு (பார்த்திராத பனுவல்கள்) | சுயவிடை | 2<br><br>2<br><br>2<br><br>2<br>(ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினா என்னும் அடிப்படையில் மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை அளித்தல்) | **100**<br>**(50%)** |

# கட்டுரை மதிப்பீட்டுத் திட்டம்

## பொருள் (17 மதிப்பெண்கள்)

| நிலை / விளக்கம் | வகை 1<br>14 - 17 | வகை 2 (மேனிலை)<br>11 - 13 | வகை 2 (கீழ்நிலை)<br>9 - 10 | வகை 3 (மேனிலை)<br>6 - 8 | வகை 3 (கீழ்நிலை)<br>4 - 5 | வகை 4<br>1 - 3 |
|---|---|---|---|---|---|---|
| **கருத்து வளம்** | ▪ சிறந்த கருத்துகளும் மிக விரிவான விளக்கமும் | ▪ பல நல்ல கருத்துகளும் பெரும்பாலும் விரிவான விளக்கமும் | ▪ போதுமான கருத்துகளும் ஓரளவு விரிவான விளக்கமும் | ▪ ஓரளவு போதுமான கருத்துகள் இருப்பினும் போதுமான கருத்து விளக்கம் இல்லாதிருத்தல் | ▪ குறைந்த அளவு கருத்துகளும் விளக்கமும் | ▪ மிகக் குறைந்த கருத்துகளும் தெளிவற்ற விளக்கமும் |
| **கருத்துப் பொருத்தம்** | ▪ முழுதும் பொருத்தமிக்கது<br>▪ மிகவும் கவரும் தன்மைமிக்கது<br>▪ சுய படைப்புத்திறன் மிக்கது | ▪ பெரும்பாலும் பொருத்தமிக்கது<br>▪ பெரும்பாலும் கவரும் தன்மையுடையது<br>▪ ஓரளவு சுய படைப்புத்திறன் கொண்டது | ▪ பொருத்தமிக்கது<br>▪ ஏற்புடையதாயினும் அவ்வளவாக ஆர்வமூட்டாத கருத்துகளைக் கொண்டது | ▪ ஓரளவு பொருத்தமிக்கது<br>▪ பெரும்பாலும் ஆர்வமூட்டாத கருத்துகளைக் கொண்டது | ▪ ஓரளவு பொருத்தமிக்கது<br>▪ ஆர்வமூட்டாத கருத்துகளைக் கொண்டது | முழுதும் பொருத்தம் இல்லாதது |
| **கருத்து வளர்ச்சி** | ▪ மிகத் தெளிவான கருத்து வளர்ச்சி | ▪ தெளிவான கருத்து வளர்ச்சி | ▪ போதுமான அளவு கருத்து வளர்ச்சி | ▪ கூறியது கூறல்; சில இடங்களில் கருத்து வளர்ச்சி இல்லாதிருத்தல் | ▪ கூறியது கூறல் அதிகம் இடம்பெற்றிருத்தல்; கருத்து வளர்ச்சி இல்லாதிருத்தல் | ▪ தெளிவற்ற, முரண்பட்ட, குழப்பமான கருத்துகள் |

## மொழியும் அமைப்புமுறையும் (25 மதிப்பெண்கள்)

| நிலை / விளக்கம் | வகை 1<br>19 - 25 | வகை 2 (மேனிலை)<br>16 - 18 | வகை 2 (கீழ்நிலை)<br>13 - 15 | வகை 3 (மேனிலை)<br>10 - 12 | வகை 3 (கீழ்நிலை)<br>7 - 9 | வகை 4<br>1 - 6 |
|---|---|---|---|---|---|---|
| | ▪ மிகச் சிறந்த மொழித்திறன் | ▪ சிறந்த மொழித்திறன் | ▪ சராசரியான மொழித்திறன் | ▪ சராசரியான மொழித்திறன் | ▪ மொழித்திறன் சராசரி நிலைக்குக்கீழ் இருத்தல் | ▪ மொழித்திறன் மோசமாக இருத்தல் |
| **இலக்கணம்** | ▪ பெரும் பிழைகள் இன்மை, மிகச் சில இடறல்கள் அல்லது சிறு பிழைகள் | ▪ சில பெரும் பிழைகள், சில இடறல்கள் மற்றும் சிறு பிழைகள் | ▪ சில பெரும் பிழைகள், சில இடறல்கள் மற்றும் பல சிறு பிழைகள் | ▪ பல பெரும் பிழைகளும் சிறு பிழைகளும் | ▪ பல பெரும் பிழைகள்; பிழைகளைத் தவிர்க்கும் பொருட்டு எளிய மொழிக்கூறுகளைப் பயன்படுத்துதல் | ▪ படித்துப் புரிந்துகொள்ள இயலாத அளவிற்குப் பெரும் பிழைகள் இருத்தல் |
| **சொல்லாட்சியும் வாக்கிய அமைப்பும்** | ▪ மிகப் பொருத்தமான, பலதரப்பட்ட சொல்லாட்சி<br>▪ மிகப் பொருத்தமான பலதரப்பட்ட வாக்கிய வகைகளும் கருத்திணைப்புக் குறிகளும் | ▪ பொருத்தமான, பலதரப்பட்ட சொல்லாட்சி<br>▪ பொருத்தமான பலதரப்பட்ட வாக்கிய வகைகளும் கருத்திணைப்புக் குறிகளும் | ▪ பொதுவாகப் பொருத்தமான சொல்லாட்சி<br>▪ பலதரப்பட்ட வாக்கிய வகைகள் | ▪ எளிய சொல்லாட்சி<br>▪ எளிய வாக்கிய அமைப்புகள் | ▪ மிக எளிய சொல்லாட்சி<br>▪ ஒரே வகையான சிறு வாக்கியங்கள் | ▪ மிக எளிய சொற்களைப் பயன்படுத்துதல்<br>▪ வாக்கிய அமைப்பில் சிதைவு |
| **அமைப்புமுறை** | ▪ மிகச் சிறந்த பத்தியமைப்பும் | ▪ சிறந்த பத்தியமைப்பு | ▪ பொருத்தமான பத்தியமைப்பு | ▪ ஓரளவு பொருத்தமான பத்தியமைப்பு | ▪ பத்தியமைத்து எழுதுவதில் இடர்ப்பாடு | ▪ பொருத்தமற்ற பத்தியமைப்பு |

# கருத்துரை எழுதுதல் மதிப்பீட்டுத் திட்டம்

| நிலை / விளக்கம் | வகை 1 | வகை 2 | வகை 3 |
|---|---|---|---|
| **கருத்து** (10 மதிப்பெண்கள்) | **8-10** | **4-7** | **1-3** |
| ▪ **கருத்துப் பொருத்தம்** | ▪ முழுதும் பொருத்தமிக்கது | ▪ பெரும்பாலும் பொருத்தமிக்கது | ▪ ஓரளவு பொருத்தமிக்கது |
| ▪ **கருத்து விளக்கம்** | ▪ கருத்துகளை மிகப் பொருத்தமான சான்றுகளுடன் விளக்கி எழுதுதல் | ▪ கருத்துகளைப் பொருத்தமான சான்றுகளுடன் ஓரளவு விளக்கி எழுதுதல் | ▪ கருத்துகளை ஓரளவு பொருத்தமான சான்றுகளுடன் விளக்கி எழுதுவதில் முயற்சி இருத்தல் |
| ▪ **கருத்தின் அளவு** | ▪ போதுமான அளவு கருத்துகள் | ▪ ஓரளவு போதுமான அளவு கருத்துகள் | ▪ குறைந்த அளவிலான கருத்துகள் |
| **மொழி** (5 மதிப்பெண்கள்) | **4-5** | **3** | **1-2** |
| ▪ **மொழிப் பயன்பாடு** | ▪ பெரும் பிழைகள் இன்மை, மிகச் சில இடறல்கள் அல்லது சிறு பிழைகள்<br>▪ மிகப் பொருத்தமான பலதரப்பட்ட வாக்கிய வகைகள்<br>▪ மிகப் பொருத்தமான பல்வகைச் சொல்லாட்சி | ▪ சில பெரும் பிழைகள், சில இடறல்கள் மற்றும் சிறு பிழைகள்<br>▪ ஓரளவு பொருத்தமான பலதரப்பட்ட வாக்கிய வகைகள்<br>▪ ஓரளவு பொருத்தமான சொல்லாட்சி | ▪ சில பெரும் பிழைகள், பல இடறல்கள் மற்றும் சிறு பிழைகள்<br>▪ எளிய வாக்கிய அமைப்புகள்<br>▪ எளிய சொல்லாட்சி |

## இலக்கியத்திற்குரிய மதிப்பீட்டுத் திட்டம்

**கருத்து (20 மதிப்பெண்கள்)**

| வகை | விளக்கம் |
|---|---|
| **1**<br>(18 – 20 மதிப்பெண்கள்) | • விடையில் கருத்துப் பொருத்தம், அறிவு முதிர்ச்சி, கருத்துத் தெளிவு, கருத்து வளர்ச்சி ஆகியவை சிறப்பாக இருத்தல்<br>• விடையைப் பனுவலோடு தொடர்புபடுத்தித் திறனாய்வு நோக்கில் மதிப்பிட்டுக் கருத்துரைத்தல். அதில் சுய படைப்புத்திறனும் நுண்ணாய்வுச் சிந்தனைத்திறனும் வெளிப்படுதல்<br>• படைப்பாளர் கையாண்டிருக்கும் நடை, மொழி, கதை/கவிதையின் பின்புலம், அமைப்பு, காலம், கரு ஆகியவற்றை நன்கு அறிந்திருத்தல்<br>• விடைக்கேற்ற சான்றுகளையும் பொருத்தமான மேற்கோள்களையும் மிகச் சிறப்பாகப் பயன்படுத்துதல் |
| **2**<br>(15 – 17 மதிப்பெண்கள்) | • விடையில் கருத்துப் பொருத்தம், அறிவு முதிர்ச்சி, கருத்துத் தெளிவு, கருத்து வளர்ச்சி ஆகியவை இருத்தல்<br>• விடையைப் பனுவலோடு தொடர்புபடுத்திப் பெரும்பாலும் திறனாய்வு நோக்கில் மதிப்பிட்டுக் கருத்துரைத்தல்<br>• படைப்பாளர் கையாண்டிருக்கும் நடை, மொழி, கதை/கவிதையின் பின்புலம், அமைப்பு, காலம், கரு ஆகியவற்றை அறிந்திருத்தல்<br>• விடைக்கேற்ற சான்றுகளையும் மேற்கோள்களையும் பொருத்தமாகப் பயன்படுத்துதல் |
| **3**<br>(12 – 14 மதிப்பெண்கள்) | • விடையில் கருத்துப் பொருத்தம், அறிவு முதிர்ச்சி, கருத்துத் தெளிவு, கருத்து வளர்ச்சி ஆகியவை ஓரளவு இருத்தல்<br>• விடையைப் பனுவலோடு தொடர்புபடுத்தி ஓரளவு திறனாய்வு நோக்கில் மதிப்பிட்டுக் கருத்துரைத்தல்<br>• படைப்பாளர் கையாண்டிருக்கும் நடை, மொழி, கதை/கவிதையின் பின்புலம், அமைப்பு, காலம், கரு ஆகியவற்றை ஓரளவு அறிந்திருத்தல்<br>• சான்றுகளையும் மேற்கோள்களையும் பெரும்பாலும் பொருத்தமாகப் பயன்படுத்துதல் |

| வகை | விளக்கம் |
|---|---|
| **4**<br><br>(8 – 11 மதிப்பெண்கள்) | • விடையில் கருத்துப் பொருத்தம், கருத்துத் தெளிவு, கருத்து வளர்ச்சி ஆகியவை ஓரளவு இருத்தல்<br>• விடையைப் பனுவலோடு தொடர்புபடுத்தித் திறனாய்வு நோக்கில் மதிப்பிட்டுக் கருத்துரைக்கும் ஆற்றல் குறைந்து காணப்படுதல். பெரும்பாலும் கருத்துகளை எடுத்துரைக்கும் முறையிலே விடை அமைந்திருத்தல்<br>• படைப்பாளர் கையாண்டிருக்கும் நடை, மொழி, கதை/கவிதையின் பின்புலம், அமைப்பு, காலம், கரு ஆகியவற்றை ஓரளவு அறிந்திருத்தல்<br>• சான்றுகளையும் மேற்கோள்களைப் பெரும்பாலும் பொருத்தமாகப் பயன்படுத்தினாலும் சில சமயங்களில் அவற்றைத் தவறாகப் பயன்படுத்துதல் |
| **5**<br><br>(4 – 7 மதிப்பெண்கள்) | • சீராக அமையாத விடை. பனுவலோடு தொடர்புபடுத்தித் திறனாய்வு நோக்கில் கருத்துரைக்காது இருத்தல்<br>• முதலில் வினாவிற்கு ஏற்ப விடையைத் தொடங்கிப் பிறகு அதிலிருந்து விலகிச் செல்லுதல்<br>**அல்லது**<br>விடையை நன்கு ஆராய்ந்து எழுதாமல் கருத்துகளை மேலோட்டமாக எழுதுதல்<br>• கதை/கவிதையின் பின்புலம், அமைப்பு, காலம் மற்றும் கருப்பொருள் ஆகியவற்றை ஓரளவு அறிந்திருந்தாலும் அவற்றைப் பனுவலோடு தொடர்புபடுத்த அறியாதிருத்தல்<br>• ஒரு சில மேற்கோள்களைப் பயன்படுத்துதல் |
| **6**<br><br>(1 – 3 மதிப்பெண்கள்) | • கருத்துகளைச் சுருக்கமாக, குறிப்புகள் முறையில் எழுதியிருத்தல்<br>• பனுவலை வினாவோடு தொடர்புபடுத்த முயன்றிருத்தல் |
| **7**<br><br>(0 மதிப்பெண்) | • வினாவையொட்டி எந்தக் கருத்துகளும் இல்லாதிருத்தல்<br>• பனுவலோடு முற்றிலும் தொடர்புபடுத்தாதிருத்தல் அல்லது முற்றிலும் விலகியிருத்தல் |

**மொழிப் பயன்பாடு (5 மதிப்பெண்கள்)**

| | |
|---|---|
| **1**<br><br>(4 – 5 மதிப்பெண்கள்) | • ஆழமான கருத்துகளை எளிமையாக விளக்கிக் கூறும் தன்மையும் சரளம் மிகுந்த நடையும்<br>• பெரும் பிழைகள் இன்மை, மிகச் சில இடறல்கள் அல்லது சிறு பிழைகள்<br>• மிகப் பொருத்தமான பல்வகைச் சொல்லாட்சி |
| **2**<br><br>(3 மதிப்பெண்கள்) | • வினாவைப் பற்றிய அறிவையும் புரிந்துணர்வையும் பெரும்பாலும் தெளிவாக எடுத்துரைக்கும் நடை<br>• மிகச் சில பெரும் பிழைகள், சில இடறல்கள் மற்றும் சிறு பிழைகள்<br>• பொருத்தமான சொல்லாட்சி |
| **3**<br><br>(1 - 2 மதிப்பெண்கள்) | • மிகச் சாதாரண நடை<br>• பல பெரும் பிழைகள், பல இடறல்கள் மற்றும் பல சிறு பிழைகள்<br>• எளிய சொல்லாட்சி |